ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1705/2 - 2011 මැයි 09 වැනි සඳුදා - 2011.05.09
1705/2 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு மே மாதம் 09 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### மத்திய மாகாண அரசாங்க முகாமை உதவியாளர் சேவைப் பிரமாணக் குறிப்பு

திருத்தம் - இலக்கம் 03

2005 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 25 ஆந் திகதிய 1381/18 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மத்திய மாகாண அரசாங்க முகாமை உதவியாளர் சேவையின் பிரமாணக் குறிப்பை பின்வரும் முறையில் திருத்தம் செய்வதற்கு மத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழு கட்டளையிட்டுள்ளது.

உப பிரிவு 14: 3: 3 உடன் தொடர்ச்சியாக கீழ்க் குறிப்பிட்ட புதிய உப பிரிவுகள் பின்வரும் முறையில் உள்ளடக்கப்படும் :

(அ) 24.12.2004 ஆந்திகதிக்கு முன் மத்திய மாகாண அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில் இணைந்த மற்றும் 01.07.2012 ஆந் திகதிக்கு முன் சேவையிலிருந்து ஓய்வு பெறவிருக்கும் உத்தியோகத்தர்கள், சேவைப் பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள இரண்டாம் மொழித் தேர்ச்சியில் நிபுணத்துவத்தினைப் பெற வேண்டும் எனும் நியதியிலிருந்து விடுவிக்கப்படுகின்றனர் ;

(ஆ) ஏனையவர்கள் மத்திய மாகாண அரசாங்க முகாமை உதவியாளர் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு இரண்டாம் மொழித் தேர்ச்சியில் நிபுணத்துவத்தினை 01.07.2012 ஆந் திகதிக்கு முன் பெறல் வேண்டும் ;

(இ) மத்திய மாகாண அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள், இரண்டாம் மொழித் தேர்ச்சியில் நிபுணத்துவமின்றி 30.06.2012 ஆந் திகதி வரையில் தமது சம்பள உயர்வுகள் மற்றும் பதவியுயர்வுகள் அனைத்தினையும் பெறுவதற்கு உரித்துடையவராவார்கள்.

ஈ. எம். என். எம். ஏக்கநாயக்க,
செயலாளர்,
மத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழு.

மத்திய மாகாண அரசசேவை ஆணைக்குழு,
த. பெ. 114,
கட்டுகஸ்தோட்டை வீதி,
கண்டி,
2011, மே 03.

05- 536

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.